[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1970-71-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் திரு. கே. எம். இராமசாமி கவுண்டர் அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. பி. வெங்கடசாமி அவர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970-71-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு அவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

3. நடைமுறைக் கேள்வி.

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து

DR. H. V. HANDE : Sir, on a point of order. We have only three more days, after which the Assembly will come to a close. We have no opportunity to discuss any supplementary budget or anything like that. So, may I request the Hon. Speaker to be fairly lenient—I am not accusing the Chair—Towards us because there are no possibilities of discussing any sudden problem even on the No-Confidence Motion. For instance, we have given notice of adjournment motions ....

MR. SPEAKER : பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : We have given notice of adjournment motion with regard to the Medical College students and the Hon. Speaker has withheld his consent to it. I do not dispute.........

MR. SPEAKER : Please sit down.

DR. H. V. HANDE : Sir, I will complete my point of order.

MR. SPEAKER : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

DR. H. V. HANDE : Sir, I shall complete it.

MR. SPEAKER : எந்த விதியை மீறி இருக்கிறது என்று முதலிலே சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : The rule under which the House is going to carry on the business. Unless the Chair gives me an opportunity to explain my point of order......

MR. SPEAKER : எந்த விதியை மீறி இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். இந்த அவைக்கு நீங்கள் வழிகாட்ட வேண்டாம்.

DR. H. V. HANDE : Under rule 82 . . .

MR. SPEAKER : விதி 82-ன் கீழ் மினிஸ்ட்டர்ஸ் ஸ்டேட்மெண்டு கொடுப்பது.

DR. H. V. HANDE : Unless you give me an opportunity. . . .

MR. SPEAKER : எந்த விதி மீறி இருக்கிறது என்று சொல்லுங்கள். உங்களுக்கு ஆப்பர்சூனிட்டி, வாய்ப்பு, கொடுக்கிறேன்.

DR. H. V. HANDE : You kindly listen to me . . . .

MR. SPEAKER : எதற்காக லிசன் பண்ணுவது?

DR. H. V. HANDE : You listen to me. Unless you give me an opportunity . . .

MR. SPEAKER : உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன். ஆனால் எந்த விதியின்கீழ் கொண்டு வருகிறீர்கள்? சட்டமன்ற எந்த விதி மீறப்பட்டிருக்கிறது, எந்த நடைமுறை மீறப்பட்டிருக்கிறது, என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் வாய்ப்புத் தரலாம்.

DR. H. V. HANDE : I shall quote the rule. It is rule 42 concerning adjournment motions.

MR. SPEAKER : அதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. அட்ஜர்ன்மென்ட் மோஷனை பொறுத்த வரையிலும் . . .

DR. H. V. HANDE : You kindly note down the number of adjournment motions allowed by you in this House under rule 42...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவரின் உரிமையாகும்; அவர் சட்டத்திற்கு உட்பட்டு அதைச் செய்கிறார். அதைப்பற்றி விவாதிப்பதற்கு 'பாயின்ட் ஆப் ஆர்டர்' இல்லை. ஆகவே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

அடுத்து, அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்.

4. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது" என்ற 41 (3) விதியைத் தளர்த்த வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.